# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1993 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க,
# உள்ளூர் கடன்கள் அபிவிருத்தி
# (திருத்தச்) சட்டம்

---

*(1993, யூன் மாதம் 24 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1993, யூன் மாதம் 25 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு 7, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 60* *தபாற் செலவு : ரூபா 1.00*

1993 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்ளூர் கடன்கள் அபிவிருத்தி (திருத்தச்) சட்டம்

[1993, யூன் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.—ஓ 61/91

உள்ளூர் கடன்கள் அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1993 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்ளூர் கடன்கள் அபிவிருத்தி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. ("முதன்மைச் சட்டவாக்கம்" என இதனகத்துப்பின்னர் குறிப்பீடு செய்யப்படும்) உள்ளூர் கடன்கள் அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— 404 ஆம் அத்தியாயத்தின் 2ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(2) ஆணையாளர்கள் குறைந்தபட்சம் பதின்மூன்று ஆட்களையாவது கொண்டிருப்பதுடன் அவர்களனைவரும் அமைச்சரால் நியமிக்கப்படுதலும் வேண்டுமென்பதுடன் —

(அ) அவர்களில் ஒருவர் அமைச்சரினது அமைச்சுச் செயலாளராக இருத்தல் வேண்டுமென்பதுடன், அவர் அதன் தவிசாளராகவும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) அவர்களில் ஒருவர், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் பெயர் வழியில் அல்லது பதவி வழியில் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பகிரங்க அலுவலர் ஒருவராய் இருத்தல் வேண்டும் ;

(இ) அவர்களில் எண்மர், சம்பந்தப்பட்ட மாகாணங்களின் சம்பந்தப்பட்ட ஆளுநர்களினால் பெயர் வழியில் அல்லது பதவி வழியில் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்களான அத்தகைய மாகாணங்களின் மாகாண பொதுச்சேவை உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும் ;

(ஈ) அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவர்களான வேறு மூன்று ஆட்களில் குறைந்தபட்சம் ஒருவராவது வங்கித்தொழிலில் அனுபவம் கொண்டவொரு ஆளாக இருத்தல் வேண்டும்;".

(2) அப்பிரிவின் முடிவில் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(4) தவிசாளரினால் அவசியமெனக் கருதக்கூடியவாறு அடிக்கடி ஆணையாளர்கள் கூடுதல் வேண்டும் ;

ஆயின், எவ்வாறுயினும் ஆணையாளர்களின் கூட்டமொன்று குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாவது நடைபெறுதல் வேண்டும்.

(5) ஆணையாளர்களின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் ஐந்தாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் அவர்களில் குறைந்தபட்சம் ஒருவர், (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட ஆணையாளராகவிருத்தலும் வேண்டும்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(2) இக்கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளின் மூலம் ஆணையாளர்களுக்குக் கொடுபட வேண்டுமென அதிகாரமளிக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிரயாணப் படிகளுக்கு அல்லது வேறு செலவுகளுக்கு மேலதிகமாக, அமைச்சரின் அங்கீகாரத்துடன், ஆணையாளர்களினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விகிதப்படியான வேதியம் ஆணையாளர்களுக்குக் கொடுபடலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ஆ) "உள்ளூர் கடன்கள் அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்" என அறியப்பட வேண்டியதும் ஆணையாளர்களினால் தாபிக்கப்பட்டு பேணப்பட வேண்டியதுமான விசேட நிதியத்துக்கு உதவுதொகையளிப்பதன் மூலம், அமைச்சரினால் காலத்துக்குக் காலம் கட்டளையிடப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு நீக்கப்பட்டுவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"கடன்கள் வழங்கப் படக்கூடிய நோக்கம்.

9. உள்ளூரதிகாரசபை ஏதேனுக்கும், அல்லது உள்ளூரதிகாரசபையொன்று அதன் பணிகளைக் கைமாற்றியுள்ள சபை ஏதேனுக்கும், அத்தகைய உள்ளூரதிகாரசபை அல்லது சபை பொறுப்பேற்பதற்கு சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படக்கூடியதான தொழில்நுட்ப உதவியுட்பட ஏதேனும் பொதுசனப் பாவனை வேலையின் நோக்கத்துக்காக, அமைச்சரின் அங்கீகாரத்துடன் கடன்கள் வழங்கலாம்.".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) "உள்ளூரதிகாரசபை" என்னும் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

"உள்ளூரதிகாரசபை" என்பது ஏதேனும் மாநகர சபை, நகர சபை அல்லது பிரதேச சபை எனப் பொருள்படும்;"

(2) "அமைச்சர்" என்னும் வரைவிலக்கணத்துக்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

"அமைச்சர்" என்பது, உள்ளூர் கடன்கள் அபிவிருத்தி நிதியம் என்னும் விடயம் எவ்வமைச்சருக்குக் குறித்தொதுக்கப்படுகின்றதோ அவ்வமைச்சர் எனப் பொருள்படுவதுடன் "அமைச்சு" என்பதும் அதற்கிணங்கவே பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்;".

7. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.